ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமல்லோகார்ய மஹாமுநயே நம:

பெருமாளகோயில் யதீந்த்ரப்ரவணப்ரபாவம்

பிள்ளைலோகார்ய ஜீயர் ஸ்வாமி அருளிச்செய்த

திருவிருத்தம் தனியன் வ்யாக்யானம்

வித்வான், ந்யாய சிரோமணி சொல்வேந்தர், ரஹஸ்யார்த்த விவரணப்ரவீணர்

ஸ்ரீ வைஷ்ணவசிம்ஹம் பெருமாளகோயில் யதீந்த்ரப்ரவணப்ரபாவம்

பிள்ளைலோகம் ஸ்ரீ உ.வே. ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி

95வது திருநக்ஷத்ரம்

குரோதி ௵ ஐப்பசி ᏯᎢ 17ம் தேதி அனுஷம் (03-11-2024) ஞாயிற்றுக்கிழமை

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமல்லோகார்ய மஹாகுரவே நம:

பெருமாளகோயில் யதீந்த்ரப்ரவணப்ரபாவம்

பிள்ளைலோகார்ய ஜீயர் ஸ்வாமி

அருளிச்செய்த

திருவிருத்தம்
தனியன் வ்யாக்யானம்

வித்வான், ந்யாய சிரோமணி சொல்வேந்தர்

ரஹஸ்யார்த்த விவரணப்ரவீணர்

ஸ்ரீ வைஷ்ணவசிம்ஹம் பெருமாளகோயில்

யதீந்த்ரப்ரவணப்ரபாவம் பிள்ளைலோகம்

ஸ்ரீ உ.வே. ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி

95வது திருநக்ஷத்ரத்தை முன்னிட்டு

குரோதி ௵ ஐப்பசி ௴ **17**ம் தேதி

அனுஷ நக்ஷத்திரத்தில் **(03-11-2024)**

ஞாயிற்றுக்கிழமையன்று வெளியிடப்பட்டது.

http://acharya.org

ஸ்ரீரஸ்து

ஆழ்வார்திருவடிகளேசரணம்

எம்பெருமானார் திருவடிகளேசரணம்.

திருவிருத்தம்.

† கிடாம்பியாச்சான் அருளிச்செய்த

தனியன்.

கருவிருத்தக்குழிநீத்தபின்காமக்கடுங்குழிவீழ்ந்து,
ஒருவிருத்தம்புக்குழலுறுவீர், உயிரின் ‡ பொருள்கட்
கொருவிருத்தம்புகுதாமல்குருகையர்கோனுரைத்த,
திருவிருத்தத்தோரடிகற்றிரீர் திருநாட்டகத்தே.

அர்த்தம்—கரு-கர்ப்பஸ்தாநமாகிற, விருத்த-விருத்தமான (ஹேயமான), குழி-பள்ளத்தில் நின்றும், நீத்தபின்-கழுவினபின், காமம்-காமமென்கிற, கடும்-க்ரூரமான, குழி - பள்ளத்தில், வீழ்ந்து - விழுந்து, (பிறகு), ஒருவிருத்தம் - ஒரு கார்யத்திற்கும் யோக்யதையில்லாத கிழத்தனத்தை, புக்கு - அடைந்து, உழலுறுவீர் - திரிகிறப்ராணிகளே! உயிரின் - ஜீவாத்மாவாகிற, பொருள்கட்கு-வஸ்துக்களுக்கு, ஒருவிருத்தம்-ஒருதுர்நடத்தையும், புகுதாமல் - சேராமற்படிக்கு, குருகையர்கோன்-திருநகரிக்குஸ்வாமியான நம்மாழ்வார், உரைத்த - அருளிச்செய்த, திருவிருத்தத்து - திருவிருத்தமென்கிற திவ்யப்ரபந்தத்தில், ஓரடி - ஒருபாதத்தை, கற்று - அப்யஸித்து, திருநாட்டகத்து - ஸ்ரீவைகுண்டத்தில், இரீர் - (நிஸ்சிந்தராய்) இருங்கோள்.

[பிள்ளைலோகார்யஜீயர் வ்யாக்யாநம்.]

அவதாரிகை:—இதில், ஸப்தாவஸ்தாவஸ்திரரான ஸம்ஸாரிகளைக் குறித்து, 'ஸம்ஸாரதுக்கம் அநுவர்த்தியாமல் ஸுகோத்தரமான திருநாட்டை ப்ராபிக்கையின் இடையாட்டமாகத் திருவிருத்தமென்கிற திவ்ய ப்ரபந்

† சோமப்பிள்ளை அருளிச்செய்ததென்றும், ஆளவந்தார் அருளிச்செய்ததென்றுஞ் சொல்லுவர்.

‡ பொருளுக்கு என்றும் பாடம்

http://acharya.org

தத்திலே ஒருபாதத்தை அப்யஸித்திருங்கோள்' என்கிறது; அதாவது - (க) "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கு மழுக்குடம்பு மிந்நின்ற நீர்மை யினியா முறாமை" என்றத்தை நினைக்கிறது. (உ) * பொய் - (ங) * யாதானும் - (ச) * அழுந்தார் என்றிறே, தாத்பர்யம்: (ரு) "பொய் - யாதானும் - அழுந்தார் என்று-விரோதி நிவ்ருத்தியையும்'' என்றாரிறே; எல்லாங்கூட, ஏகவாக்ய மென்றபடி. (சு) "அடியேன் செய்யும் விண்ணப்பம்," (எ) "மாறன் விண்ணப்பஞ்செய்த" என்று ப்ரபந்தமெல்லாங்கூட, வ்ருத்தவிஜ்ஞாபநமென்றபடி.

வ்யாக்யாநம்:—ஸம்ஸாரதோஷத்தை தர்சிப்பிக்கிறதாயிறே முதலடிதான் இருப்பது. (கரு விருத்தக் குழி நீத்தபின்) கர்ப்ப ஜந்ம பால்ய யௌவந ஜரா மரண நரகங்களாகிற அவஸ்தாஸப்தகங்களில் முந்தின அவஸ்தையை முதலிலே சொல்லுகிறது; 'கருவிருத்தக்குழி' என்று. 'கரு' என்று - கர்ப்பமாய்; 'இருத்தக் குழி' என்று - இருத்தப்பட்ட குழியென்றாய், வைக்கப்பட்ட குழியென்றபடி. (அ) "మాతా భస్త్రా-மாதாபஸ்த்ரா" என்று இட்டுவைக்கும் பையோபாதியாயிறே மாதா இருப்பது. (கூ) * மக்கள் தோற்றக்குழியான (க0) * வயிற்றுக்குழியிலேயிறே, உழைக்கிறது. அன்றிக்கே, புறக்கருவாய், விருத்தமான (వర్ధమాన) குழியென்றுமாம்; அதுதான் அத்யந்தம் கர்ஹையாயிறே இருப்பது. இதின் தோஷத்தை பஞ்சாக்நிவித்யையிற் பரக்க ஓதிற்றிறே. அங்ஙனுமன்றிக்கே, 'விருத்தம்' என்று - வ்ருத்தமாய் வளைவாய் (கக) "சூழ்பிறப்பு" என்று வளையவளைய வருகிறதாகவுமாம். இதுதான், (கஉ) "வயிற்றிற் றொழு" என்னும்படி கழற்றப்போகாததா யிருக்கும்: (கங) "మాతుర్జఠరగోల్పగః-மாதுர் ஜடரகோல்பக:" (கச) "ఉల్బసంవేష్టితో భుగ్నపృష్ఠగ్రీవాస్థిసంహతిః-உல்பஸம்வேஷ்டிதோபுக்ந ப்ருஷ்டக்ரீவாஸ்திஸம்ஹதி:" என்று நெருக்கப்பட்டாயிற்று இருப்பது. (குழிநீத்தபின்) (கரு) "క్లేశాన్నిష్క్రాన్తిమాప్నోతి-க்லேஶாந்நிஷ்க்ராந்திமாப்நோதி" என்று துக்கத்தோடே கர்ப்பமார்க்காந் நிர்க்கதனாய், யோநிஸங்கடநிர்க்கமத்திலே (கசு) "విజ్ఞానభ్రంశమాప్నోతి-விஜ்ஞாநப்ரம்சமாப்நோதி" என்று அறிவுகலங்கி, அறிவில்லாத சைசவதசையை அடைந்து, (கஎ) "స్నానపానాదిహారమవాప్నోతి పరేచ్ఛ

(க) திருவிருத்தம் - க.
(உ) ,, ,, க.
(ங) ,, ,, சுரு
(ச) ,, ,, க00.
(ரு) ஆசார்யஹ்ருதயம் - ங
(சு) திருவிருத்தம்-க.
(எ) ,, ,, க00.
(அ) ஸ்ரீவிஷ்ணுபுராணம்-ச-கசு-கஉ.
(கூ) பெரியதிருமொழி-கக-அ உ.
(க0) பெரியதிருமொழி-சு-உ-ங.
(கக) திருவிருத்தம்-சரு.
(கஉ) பெரியாழ்வார்திருமொழி-ரு-உ-ங
(கங)
(கச) ஸ்ரீவிஷ்ணுபுராணம்-சு-ரு-க0,
(கரு) ,, ,, சு-ரு-கரு.
(கசு) ,, ,, ,, ,, கசு.
(கஎ) ,, ,, ,, ,, கஅ.

http://acharya.org

[illegible] ஸ்நாநபாநாதிசாஹார மவாப்நோதிபரேச்சயா।
அசக்தப்ரஸ்தரேஸுப்த:" என்று அதிலே அந்ததுக்கத்தையும் அநுபவித்து, அநந்தரம் (க) '[illegible]-பால்யேக்ரீடநகாஸக்தா:" (உ) "தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள் செய்துமிட்டேன்'' என்று பால்யத்திலுண்டான க்லேசத்தையும் அநுபவித்து, அநந்தரம்.

(ங) "வெங்காமக் கடுங்குழி வீழ்ந்து," (ச) "துயரஞ்செய் காமம்" என்னுமாபோலே, பின் (காமக் கடுங் குழி வீழ்ந்து) (ரு) "வழுக்கி யங்கோர் முழையினிற் புக்கிட் டழுந்திக் கிடந்துழல்வேனை'' என்றும், (சா) "சாந்தேந்து மென்முலையார் தடந்தோள் புணரின்ப வெள்ளத் தாழ்ந்தே னருநரகத் தழுந் தும் பயன்படைத்தேன்" என்றுந் தப்பவொண்ணாதபடி துக்காத்மகமான ஸ்வப்ரத்திலே பதித்து.

பின்பு விஷயாநுபவயோக்யமான பருவங் கழிந்தவாறே: (ஒரு விருத்தம் புக்கு) அத்விதீயமான வார்த்தகத்தை ப்ராப்தராய்; 'விருத்தம் - வ்ருத்தம்; ([illegible].) அத்தால், வ்ருத்ததையை ([illegible]) அடைந்து என்றபடி. இந்த மூத்தமையாலுண்டான குற்றத்தை (எ) * முற்ற மூத்திலே மூதலித்தருளினாரிறே.

உழலுறுகையாவது - ஜரா மரண நரக வேதனைகளிலே அடிப்பட்டு அதுவே யாத்ரையாய்ப் போருகிறவர்களென்றபடி: அம்மை வயிற்றேறு யமன் கழுவோடு வளையவளைய உழன்றிறே திரிவது; (அ) "[illegible] - யமாலயமஹாருலே ஜடரேமாதுராதுர." என்னக்கடவதிறே.

அன்றிக்கே, (ஒரு விருத்தம் புக்கு) என்று - அநாதரத்தாலே 'ஒரு விருத்தம்' [illegible]) என்றதாய், இப்படிப்பொல்லாவொழுக்கத்திலே புக்கு உழலுகிறவர்களென்றாகவுமாம்.

இப்படிஉழலாதபடி; (உயிரின் பொருள்கட்கு) (கா) "அந்நலத்தொண்பொருள்" என்னும்படி பகவதநுபவ யோக்யமான ஆத்மவஸ்துக்களுக்கு; 'உயிரின்பொருளுக்கு' என்றபோது, தேஹத்தளவன்றிக்கே ஆத்மப்ரயோஜநார்த்தமாக என்றுமாம்.

(க) ஸ்ரீவிஷ்ணுபுராணம் க-கஎ-எரு,
(உ) பெரியதிருமொழி-க-கா-எ.
(ங)
(ச) திருவாய்மொழி-எ-அ-எ.
(ரு) பெரியாழ்வார்திருமொழி-ரு-உ-ங.
(சா) பெரியதிருமொழி-ங-ரு-சா
(எ) ,, ,, க-ரு-
(அ)
(கா) திருவாய்மொழி-க-உ-க0.

http://acharya.org

(ஒரு விருத்தம் புகுதாமல்) ஏவம் விதமான விருத்தங்கள் ([illegible]) ஏகதேசமும் ப்ரவேசியாமல்; துர்வ்ருத்தங்கள் ([illegible]) ஒன்றுஞ் சென்றணுகாமலென்றபடியாம். (௧) * நடாவிய கூற்றமிறே. (௨) "இப்பிறப்பறுக்கும்" என்றும், (௩) "அழித்தாயுன் திருவடியால்" என்றும். (௪) "அடியனை வல்வினைத்துப்பாம் புலனைந்தும் துஞ்சக்கொடான்" என்றும் (௫) ஒயுமூப்புப் பிறப்பிறப்பு, என்றும், (௬) "உயிர்கொண் டுடலொழியவோடும்போதோடி யயர்வென்ற தீர்ப்பான்" என்றும், (௭) "இளைக்கநமன்றமர்கள் பற்றியிளைப் பெய்த நாய்தந்து மோதாமை நல்குவான்" என்றுந்தாமே அருளிச்செய்தாரிறே.

இப்படி நிவர்த்யங்களானவை வந்து ப்ரவர்த்தியாமல், (குருகையர் கோன் உரைத்த) (௮) "குருகைக்கோன் சடகோபன்" என்கிறபடியே (௯) * நல்லார் நவில்குருகூர்நகரானான ஆழ்வார் அருளிச்செய்த.

(திரு விருத்தத்து ஓர் அடி கற்றீர்) ப்ரதம ப்ரபந்தமான திருவிருத்தத்திலே ஒருபாதத்தை ஓதியிருங்கோள்; உங்களுக்கு உஜ்ஜீவநத்துக்கு ஓரடியே போதும். 'திருவிருத்தம்,' என்கையாலே, கலித்துறை விருத்தமென்றுதல், தம்முடைய வ்ருத்த விஜ்ஞாபநமென்றுதல் ஆகிறது. (ஓர் அடி கற்றீர்) ஆசார்யோச்சாரணாநுச்சாரண முகத்தாலே அப்யஸித்து தந்நிஷ்டராயிருங்கோள். அவரும் (௧0) "திருமாலவன் கவி யாதுகற்றேன்" என்றாரிறே.

இத்தை அப்யஸிக்கிறது எதுக்காகவென்னில் :— (திருநாட்டகத்தே) திருநாட் டிடையாட்டமாக ; திருநாட்டு விஷயமாக ; அத்தை ப்ராபிக்கைக்காக என்றபடி. (௧௧) * இருள்தருமாஞாலத்தில் அவித்யாதி தோஷங்களை அநுஸந்தித்தாவிறே திருநாடு விசேஷிப்பது. அல்லது, [உயிர்கட்கு ஒருவிருத்தம் புகுதாமல் திருநாட்டகத்தே திருவிருத்தத் தோரடி கற்றீர்] என்றுமாம்; (௧௨) * ஊரு நாடு முலகமுந் தம்மைப்போலே யாக்கவல்ல தாமுடையவரிறே: (திருநாடு) திருநகரியோடு அணித்தான திருவழுதிநாடு என்றபடி. (௧௩) "[illegible] பவத்விஷயவாஸிந:" என்றிருந்தால் ஒரு விருத்தம் புகுதாது: (௧௪) "[illegible] நத்ரஸஞ்சரிஷ்யந்தி" இதி; அவ்விடாக்ஷரஸம்வித்தரிறே ஆழ்வார்; ஆகையால், ஸம்ஸாரநிவர்த்தகராய் மோக்ஷப்ரதாநதீக்ஷிதருமாயிருப்பர். (திருநாட்டகத்தே திருவிருத்தத் தோரடி கற்றீர்)

---

(௧) திருவிருத்தம்-௬.
(௨) திருவாய்மொழி-௧0-௨-௩
(௩) ,, ,, ௬-௨-௯
(௪) ,, ,, ௧-௭-௨.
(௫) திருவாய்மொழி. ௩-௩-௯.
(௬) நான்முகன் திருவந்தாதி-௮௮.
(௭) பெரியதிருவந்தாதி-௨௩.
(௮) திருவாய்மொழி-௩௯-௧௧.
(௯) திருவிருத்தம்-௧00.
(௧0) ,, ,, . ௪௮.
(௧௧) திருவாய்மொழி-௧0௬-௧.
(௧௨) ,, ,, ௬-௭-௨.
(௧௩) ஸ்ரீராமாயணம்-ஆரண்ய ௧-௨0.
(௧௪)

http://acharya.org

திருநாட்டுக்குள்ளே யென்னுதல், திருநாட்டிடத்திலே யென்னுதல்; இரண்டாலும் அவர் விஷயவாஸம் உண்டென்றபடி.

ஆழ்வார்க்கு இதில் அவஸ்த்தாஸப்தகத்தில் அநுபவமெல்லாம் பகவத் விஷயத்திலேயாயிருக்கும். (க) * கண்ணன் நீண்மலர்ப் பாதம் பரவிப்பெற்ற வரிறே. உடைய நங்கையார் திருவயிற்றிலே எழுந்தருளியிருக்கச் செய்தே (உ) * அடிமை செய்ய வுற்றிருப்பர். (ங) * அறியாக் காலத்துள்ளே யடிமைக்க ணன்புசெய்வித்து, * (ச) ஆழியங்கைப் பேராயர்க் காளாம் பிறப்பாய், திருவவதரிக்கும்போதும் சடகோபராக அவதரித்து, (ரு) * க்ருஷ்ணத்ருஷ்ணாதத்வஜன்மமாய், (சா) * ஸஹஜஜ்ஞாநகபூர்ணராய், பின்பு (எ) "அவன்முகத் தன்றி விழியேன்" என்று முகுளிதநயநராய், முலைப்பாலருந்தாதே, (அ) "அருளான் மன்னு குருகூர்ச் சடகோபன்" என்னும்படி அருளே தாரகமாக வளர்ந்து, (கூ) அவ்வூர்த் திருநாமங் கற்றபின்" என்னும்படி வார்த்தை கற்று, (க0) * என்னவார்த்தையுங்கேட்குறுதே; (கக) "சங்கென்னும் சக்கரமென்னும் துழாயென்னும்" என்று கைகண்டத்தையும் நடுக்கிடந்தத்தையும் சொல்லி, (கஉ) * மேவிநைந்து நைந்து விளையாடலுறாதே, (கங) * யாவையுந் திருமால் திருநாமங்களேயாய், (கச) [illegible] "க்ருஷ்ணக்ரீடாம் யஆதசே" என்று தச்சேஷ்டிதாநுகாரியாய், பதினாறு திருநக்ஷத்ரம் நிரம்பினவாறே (கரு) * அமுதமென் மொழியான திருவாய்மொழி பாடி அடிமை செய்து; (கசா) "எல்லாங்கண்ணன்" என்று, பின்பு (கஎ) * பாலேபோற் சீர்த் பழுத்து, அநந்தரம் (கஅ) * பாடிப்போய்க் காயங் கழித்து அவன் தாளிணைக் கீழ்ப் புகுங் காதலையுடையராய், (ககூ) "ஐயார் கண்ட மடைக்கிலும் நின்கழ லெய்யாதேத்தவருள்செய்" என்னும் மநோரதத்தையுடையராய், (உ0) * போம்வழியைப்பெற்று, (உக) * அவாவற்று வீடுபெற்று, (உஉ) * திருவடியே சுமந்துழலக் கூட்டரிய திருவடிக்கட் கூடி, (உங) * வழுவிலா வடிமை செய்து வாழுமவரிறே.

(க) திருவிருத்தம்-ஙஎ.
(உ) பெரியாழ்வார் திருமொழி-ருங-கூ.
(ங) திருவாய்மொழி-க-ங-ங.
(ச) பெரிய திருவந்தாதி-எகூ.
(ரு) பராங்குசாஷ்டகம்-ங.
(சா) பார்க்கவபுராணம்.
(எ) நாய்ச்சியார் திருமொழி-கஉ-ச.
(அ) திருவாய்மொழி-க-ரு-கக.
(கூ) ,, ,, சா-ரு-கூ.
(க0) ,, ,, சா-ரு-எ.
(கக) ,, ,, ச-உ-ங.
(கஉ) ,, ,, சா-எ-ரு.
(கங) திருவாய்மொழி. சா-எ-ங.
(கச)
(கரு) திருவாய்மொழி-சா-ரு-உ.
(கசா) ,, ,, சா-எ-க.
(கஎ) பெரியதிருவந்தாதி-ருஅ.
(கஅ) திருவாய்மொழி-ங-கூ-அ.
(ககூ) ,, ,, உ-கூ-ங.
(உ0) ,, ,, ங-கூ-ங.
(உக) ,, ,, க0-க0-கக.
(உஉ) ,, ,, ச-கூ-கூ.
(உங) ,, ,, ங-ங-க.

http://acharya.org

ஆகையால், 'அல்லாதார்ஸூக்தி பந்தஹேது ; ஆழ்வார் திவ்யஸூக்தி முக்திஹேது' என்றதாயிற்று.

இத்தால் 'இழக்கிறது ஹேயமான ஸம்ஸாரம் ; பெறுகிறது விலக்ஷணமான பரமபதம்; இதுக்குடலாக ஸதாசார்யன் அருளிச்செய்த ஒரு நல்வார்த்தையை ஸத்துக்களிடத்திலே அப்யஸித்து நிர்ப்பரனாயிருக்கக்கடவன்' என்னுமர்த்தம் சொல்லிற்றாயிற்று.

பிள்ளைலோகார்யஜீயர் திருவடிகளே சரணம்.

தாத்பர்யம்:— கர்ப்பஜந்மபால்ய யௌவநஜராமரணநரகங்களென்று ஏழு விதமாய அத்யந்த துக்ககரமாயிருக்கிற அவஸ்தைகளை மாறி மாறி யநுபவித்துக்கொண்டு அங்கு நின்றும் கரையேறச் சக்தியற்றவர்களாய்த் திரிகிற ஓ ப்ராணிகளே! உங்களுக்கோர் நல்வழி யுபதேசிக்கிறேன் கேளுங்கள். நீங்கள் தேகாத்ம ப்ரமத்தைவிட்டு குருகாதிபரான நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தத்தில்முதல்பாதத்தை யப்யஸித்து நிர்ப்பரராயிருந்து தேஹத்தைக் காட்டிலும் விலக்ஷணமாயிருக்கிற ஆத்மவஸ்துவை இஸ்ஸம்ஸாரத்தில் நின்றும் விலக்கி பரமபதத்தை யடைவிப்பிக்கப் பாருங்கோள்.

பிள்ளைலோகம் ஜீயர் பெருமை போற்றும் தமிழ் தனியன்

குலநாத னென்கள் மணவாள யோகி குணக்கடலைப்
பலநாளு மண்டிப் பருகிக் களித்திந்தப் பாரினுள்ளே
உலகாரிய முனிமேகம் முந்நாளென் னுள்ளங் குளிர
நலமான நீர்மழை நாளும் பொழியுமிந் நானிலத்தே.

(யதீந்த்ரப்ரவணப்ரபாவம்)

http://acharya.org

பிள்ளைலோகம் ஜீயர் வைபவம்

இனி பரவஸ்து நாயனாரின் ஜ்யேஷ்ட குமாரரான **வரதாசார்யருடைய வைபவம்** சொல்லுகிறது.

புநஃசாஹீச்வர: ஸ்ரீமாந் அநியோகாந்மஹீதலே |
ஜநிஷ்யதி ஸ்ரீநகர்யாம் யதீந்த்ரப்ரவணாத்மநா ||

என்று ஆதிசேஷாவதாரரான எம்பெருமானார் தாமே மணவாள மாமுனிகளாகத் திருவவதரித்து, பிள்ளைலோகாசாரியர் செய்தருளின முமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீவசனபூஷணம் என்கிற மூன்று ரஹஸ்யங்களுக்கும், அவர் திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச்செய்த ஆசார்ய ஹ்ருதயத்திற்கும் வியாக்யானமிட்டு அருளினார். பின்பு, மணவாளமாமுனிகள் அருளிச்செய்தவையான உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்திப்ரபந்தம் இவற்றுக்கு வியாக்யானம் இடுக்கைக்காக, எம்பெருமான் பிள்ளைலோகாசாரியரை மீண்டும் அவதரிப்பிக்க, வரதாசார்யரான இவரும்,

சைத்ரேமாஸி ச்ரவணபே கார்க்யவம்சாம்புதேர்விதும் |
அவதீர்ணம் லோகுரும் சடாரி ஸூதமாச்ரயே ||

என்கிறபடியே சித்திரைத் திருவோணத்திலே அவதரித்து,

"ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம், யதீந்த்ரப்ரவண ப்ரபாவம், லோகாசார்ய பஞ்சாசத், ராமாநுஜார்ய திவ்ய சரிதை ஆகியவற்றையும், இராமாநுச நூற்றந்தாதி, ஆர்த்திப் பிரபந்தங்களுக்கு வ்யாக்யானம், நாலாயிரத் தனியன்களுக்கு வ்யாக்யானம், திருமந்திரார்த்த அரும்பதம், திருப்பாவை வ்யாக்யான அரும்பதம், வாக்யகுருபரம்பரா வியாக்யானம், யதிராஜவிம்சதி வியாக்யானம்" ஆகியவற்றை இட்டருளி அழகியமணவாளன் திருவுள்ளத்தைப் போர உகப்பித்து, திருமாலை, திருப்பரிவட்டம், ஸ்ரீசடகோபம் முதலான வரிசைகளையும் பெற்று, பஞ்சபேரங்களுடனே எழுந்தருளி இருந்த பிள்ளை லோகாசாரியருடைய திருவாராதனப் பெருமாளாகிய அழகிய மணவாளனையும் தமக்கு ஆராத்ய விக்ரஹமாகப் பிரஸாதிக்கப் பெற்று,

ரங்கே ஸர்வ ப்ரபந்தாம்ஸ்ச ச்ருத்வா கருட மண்டபே |
லோகாசார்யேதி தத்ரோக்த: ரங்கிணா பரமேஷ்டிநா ||

என்கிறபடியே அழகியமணவாளன் நியமனமடியாகவும், மணவாள மாமுனிகள் நியமனமடியாகவும் தாம் அருளிச்செய்த ப்ரபந்தங்களை கருட மண்டபத்திலே அழகியமணவாளன் திருச்செவி சாத்தி மகிழும்படியாக

http://acharya.org

க்ருதார்த்தராய், பின்பு தம்முடைய குமாரர்க்கு **வெள்ளை ஜீயர்** என்று திருநாமம் சாத்தி, பஞ்சஸம்ஸ்காரமும் விசேஷார்த்தங்களும் ப்ரஸாதித்தருளி, மற்றுமுள்ள சிஷ்யர்களையும் அப்படியே அநுக்ரஹித்து,

அனந்தரம், பெருமாள கோயிலுக்கு (காஞ்சீபுரத்திற்கு) எழுந்தருளி, சிஷ்யரான திருக்கண்ணபுரத்தடியாரோடும், திருக்குமாரரான அழகிய மணவாளப்ரப்ருதிகளோடும், திருத்தகப்பனாரான பரவஸ்து நாயனார் ப்ரஸாதித்தருளிய ஸ்ரீபாஷ்ய, பகவத்விஷய ரஹஸ்யார்த்தங்களை ப்ரவசனம் பண்ணிக்கொண்டு போகிற காலத்தில், வடநாட்டில் நின்றும் விஜயநகராதிப்தியான பராங்குஶ ராஜா என்பவன் ஒருவன்,

இவர் திருவடிகளில் ஆச்ரயித்து, பஞ்சஸம்ஸ்காரமும் பெற்று நித்யகிங்கரனாய் இருக்கச் செய்தே, 'ஸமுத்ரத்திலே ஜீர்ணமாகிய தம்முடைய திவ்ய ஸந்நிதியை உத்தாரணம் பண்ணவேணும்' என்று ஸ்ரீமல்லாபுரவராதீசரான தலசயனத்துறைவார் பராங்குச ராஜாவுக்கு ஸ்வப்னம் ஸாதித்து நியமிக்க, ராஜாவும் (பிள்ளைலோகம் ஜீயரை) லோகாசாரியரை முன்னிட்டுக் கொண்டு,

திருக்கடல்மல்லைச் சென்று ஜீர்ணோத்தாரணம் பண்ண உபக்ரமிக்கும் போது, தலசயனத் துறைவாரும் தாம் புற்றிலே இருப்பதாக மீண்டும் ராஜாவுக்கு ஸ்வப்னம் ஸாதிக்க, அந்த இடத்திலே விமானம் கட்டி வைத்து ஸந்நிதி ப்ரதிஷ்டையையும் மஹாஸம்ப்ரோக்ஷணத்தையும் செய்வித்து, புஷ்ய நக்ஷத்திரத்தில் த்வஜாரோஹணமும்,

விசாகா நக்ஷத்திரத்தில் அவப்ருதோத்ஸவமும் நடப்பித்து, பிறகு, பராங்குச ராஜாவும் தன்னுடைய ஆசாரியரான பிள்ளைலோகாசாரியருக்கு ஸமஸ்தபரிகரங்களையும் சிஷ்யராக ஆச்ரயிப்பித்து, ஸ்தலசயனத்துறைவார் ஸந்நிதியிலே முதல் தீர்த்தம், அருளப்பாடு, பரியட்டம், திருமாலை நடப்பித்து காலோசித பஹுமானங்களும் நடப்பிக்கும்படி பெருமாள் முன்னிலையில் தாம்ரசாஸனம் எழுதிக்கொடுத்து,

சத்ர சாமராதிகளோடே பிரம்மரதம் பண்ணுவித்துத் தானும் க்ருதார்த்தனாம் விஷ்வக்ஸேநாதிகாரமெல்லாம் தன் ஆசாரியர் மூலமாகவே நடக்கும்படி திட்டம் செய்து, ஆசார்ய நியமனத்தின்படி தானும் பரிவட்டம், திருமாலை ஸ்ரீசடகோபனையும் பெற்று க்ருதக்ருத்யனாய் மிகவும் மகிழ்ந்து தன் ஊரேறச் சென்றான்.

ஸ்ரீமத் யதீந்த்ர ப்ரவணப்ரபாவ பிரதிதாந்மநே
ஸ்ரீகார்க்யவம்ச்யலோகார்யமுநயே நித்யமங்களம்

http://acharya.org

|| श्रीस्तु ||



|| श्रीमते रामानुजाय नमः ||

பெருமாளகோயில்

யதீந்த்ரப்ரவணப்ரபாவம்

பிள்ளைலோகாசார்யர் வம்ஶதனியன் வாழித்திருநாமம்

திருமாளிகை கூடஸ்தரும் உடையவர் திருவடிகளில் ஆஶ்ரயித்த

எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளில் ஒருவரும்

ஸ்ரீகார்க்யகுல திலகருமான

நடுவிலாழ்வான்

தனியன்

यनि हा लसतर्ं नर्य्यैं गा र्यवैंश महार्ड्डुंधम ।
म महर्ति सदो चला मह्ययमायख क्लोनेधम ॥

யேந ப்ரோல்லஸதே நித்யம் கார்க்யவம்ஶ மஹாம்புதிம் |
மந்மஹே தம் ஸதா சித்தே மத்யமார்யம் கலாநிதிம் ||

பரவஸ்து பட்டர்பிரான் ஜீயர்

தனியன்

रङ्गयजामात्रयागिी ह्ृ ाीदसविज्कधारवम ।
भट्टनाथमुर्नें व द वान्स योद गुणार्णवम ॥

ரம்யஜாமாத்ரு யோகீந்த்ர பாதஸேவைக தாரகம் |
பட்டநாதமுநிம் வந்தே வாத்ஸல்யாதி குணார்ணவம் ||

वे कडिदेतभा जातैं वरयोगिदिोश्रतम ।
गा यवैंशसमुतैं भट्टनाथमुर्नें भजा॥

வ்ருஶ்சிகே(அ)திதிபே ஜாதம் வரயோகி பதாஶ்ரிதம் |
கார்க்யவம்ஶ ஸமுத்பூதம் பட்டநாதமுநிம் பஜே ||

http://acharya.org

வாழித்திருநாமம்

இன்னுலகிற் கச்சி தன்னில் வந்துதித்தோன் வாழியே
 எழில் கார்த்திகைப் புனர்பூசத்து இங்குற்றான் வாழியே*
மன்னுமறை தண்டமிழை மகிழ்ந்துறைத்தான் வாழியே
 மணவாளயோகி மலர் தாள் பணிவோன் வாழியே*
பன்னு சிச்சனநுட்டானம் அறிவித்தான் வாழியே
 பாரிலட்டதிக்கயத்தில் பேர் பெற்றான் வாழியே*
சொன்ன நெறி மதுரகவி போலுமவன் வாழியே
 தூய்மை பட்டர்பிரான் துணையடிகள் வாழியே.

யதீந்த்ரப்ரவண ப்ரபாவம் பிள்ளைலோகார்ய ஜீயர் தனியன்

चज्श मोस श्रवणभ गा र्यवैंशाड्डुँधोर्विधुम ।
अवतीणख लाक्ग़ुर्क्षं शठेर सुतमाश्रयाि ॥

சைத்ரே மாஸி ஶ்ரவணபே கார்க்யவம்ஶாம்புதேர்விதும் |
அவதீர்ணம் லோககுரும் ஶடாரி ஸூதமாஶ்ரயே ||

ஸ்ரீசடாரிகுரோர்திவ்ய ஸ்ரீபாதாப்ஜ மதுவ்ரதம் |
ஸ்ரீமத் யதீந்த்ர ப்ரவணம் ஸ்ரீலோகார்ய முநிம் பஜே ||

லோகாசார்யர் என்று இவருக்குப் பெயர் ஏற்பட்ட காரணம்

ரங்கே ஸர்வப்ரபந்தாம்ஸ்ச ச்ருத்வா கருட மண்டபே |
லோகாசார்யேதி தத்ரோக்த: ரங்கிணா பரமேஷ்டி நா ||

வாழித்திருநாமம்

சீராரும் கச்சி நகர் சிறக்க வந்தோன் வாழியே
 சித்திரையில் ஓணத்தில் உதித்த செல்வர் வாழியே*
ஏராரும் குழல் மடவாரின்புற்றோன் வாழியே
 யதீந்த்ரப்ரவண ப்ரபாவம் எடுத்துரைத்தான் வாழியே*
நீராரு அரங்கத்தில் நிறைவேற்றினான் வாழியே
 நீரே லோகாரியனென்று நியமனம் பெற்றான் வாழியே*
தாராரு மாறனடி தினம் தொழுவோன் வாழியே
 தாரணியில் லோகமணி தாள்களென்றும் வாழியே.

http://acharya.org

பிள்ளைலோகம் ஜீயரின் பெருமை போற்றும் தனியன்கள்

ஸ்ரீசம் பத்மாம் சமூராட் வகுலதரமுநீநாத பங்கேருஹாக்ஷ
ஸ்ரீராமாந்யாமுநார்யம் ததநுசர மஹாபூர்ண ராமாநுஜார்யௌ
த்யாயத் கோவிந்தபட்டாரக நிகமசிரோயோகி லோகார்யக்க்ருஷ்ணாத்
தத்புத்ர ஸ்ரீநகேசௌ வரமுநிமபி தம் பாதி லோகார்யவர்ய: ॥

யச்ஸ்ரீ சௌம்யவரேசயோகிசரண: ஸ்ரீபட்டநாதோமுநி:
தத்ப்ருத்ய: பரவஸ்து வேங்கடஸுஹ்ருத் காந்தோபயந்தோமுநி:
தத்சிஷ்யம் சடவைரிதேசிகவர ஸ்ரீகர்க்ய வம்சோத்தம:
தத்பாதாப்ஜ மதுவ்ரதம் முநிவரம் லோகார்யவர்யம் ச்ரயே ॥

ஸ்ரீராமானுஜ தேசிகேந்திரவிஜய ஸ்ரீமத்த்வஜஸ்ரீரிதி
ப்ரக்யாதஸ்ஸகல ச்ருதிஸ்ம்ருதி விதாமாத்யஸ்ததீயோத்தம:
ஸோயம் ஸ்ரீபரவஸ்து கார்க்ய சடஜித் குர்வாங்க்ரி பதமாச்ரித:
ஸ்ரீலோகார்ய முநீச்வரோ விஜயதாம் ஸ்வாகார ஸம்பத்க்ரிய: ॥

(ஸ்ரீவைஷ்ணவ சமயாசார நிஷ்கர்ஷம் தனியன்)

சடரிபு பதபத்மயுக்மப்ருங்கோ வரவரயோகி கதாம்ருதாந்தரங்க:
அகதயதுபதேசரத்நமாலாவிவ்ருத்திமிமாம் ஜகதார்ய யோகிவர்ய:

(உபதேசரத்தினமாலை தனியன்)

லோகாசார்ய முநிம்வந்தே தீசமாதி குணார்ணவம்
தம்சடாரிகுரோச் சிஷ்யம் ஆர்த்திவ்யாக்யாம் கரோதி ய: ॥

ஆர்த்தி வ்யாக்யாம் வரவரமுநேரார்த்பந்தோர் மநோஜ்ஞாம்
லோகாசார்யோமுநிரக்ருதஸல்லோக மாஹ்லாதயந் ஸ:
ஆசார்யாணாம் சடரிபுக்ருதேரர்த்த நிர்வாஹசக்தௌ
ப்ராசாம் பச்சாத் புவிஸுமத யோயம் வதந்திபிரகல்பம் ॥

காந்தோபயந்த்ருயமிநோ ஜகதார்யயோகீ
வ்யாக்யாத் க்ருபாரஸநிதி: க்ருதிமார்த்யபிக்யாம்
யம்பூதலே நிகம சீர்ஷவிதோவந்தி
காந்தோபயந்த்ருயமிநோவதரம் த்விதீயம் ॥

(ஆர்த்தி பிரபந்தம் தனியன்)

http://acharya.org

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

ஸ்ரீமத் வரவர முநயே நம :

ஸ்ரீ மணவாள மாமுனிகள் வைபவம்

இந்நாளே நன்னாள் : ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் பல ஆசாரியர்கள் அவதரித்து இருக்கிறார்கள். பகவானே பிரதமாசாரியன். நமது ஆசார்ய பரம்பரை பகவானிடமிருந்தே தொடங்குகிறது. நாதமுனிகள், ஸ்ரீ ஆளவந்தார், எம்பெருமானார், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர் முதலிய மஹாசாரியர்களால் ஸ்ரீ வைஷ்ணவம் நன்கு வளர்க்கப் பட்டுள்ளது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆசாரியர் இருந்தாலும் தென்னாசார்ய ஸம்பிரதாயம் மணவாள மாமுனிகளையே கடைசி ஆசாரியராக ஏற்றுக் கொண்டுள்ளது. (ஆழ்வார்கள் தொடங்கி எம்பெருமானார் நடுவாக மணவாள மாமுனிகளுக்கு முற்பட்ட ஆசாரியர்களின் வைபவத்தை 'குரு பரம்பரா ப்ரபாவம்' என்ற நூல் விவரித்துக் கூறுகிறது. மணவாள மாமுனிகளைப் பற்றியும் அவருக்குப் பிற்பட்ட ஆசாரியர்களைப் பற்றியும், அவரது ஸம காலத்துப் பெரியோர்களைப் பற்றியும் பிள்ளைலோகார்ய ஜீயர் அருளிய 'யதீந்த்ர ப்ரவண ப்ரபாவம்' என்ற நூல் விளக்கமாகக் கூறுகிறது.) அதனாலேயே அனைவரும் ஒருமுகமாக எல்லா இடங்களிலும் 'மணவாள மாமுனியே! இன்னம் ஒரு நூற்றாண்டிரும்' என்று பல்லாண்டு கூறுகிறார்கள். அவர் அவதரித்த நாள் ஐப்பசித் திருமூலம், பகவானின் திரு அவதாரத்தைவிட ஆசாரியர்களின் திரு அவதாரம் மிகவும் பயனுடையது என்று பெரியோர் கருதுவர். ஆதலால் ஐப்பசித் திருமூலமாகிய இந்நாளே நன்னாள்.

திருமூலமே மூலம் : மூலம் என்ற சொல்லுக்குக் ''காரணம்'' என்று பொருள் கூறுவர். ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயம் (தென்னாசார்ய தரிசனம்) இன்றளவும் தழைத்தோங்கி இருப்பதற்குக்

http://acharya.org

திருமூலமே காரணம். எம்பெருமானை விட்டுச் சிறிதும் பிரியாமல் அடிமை செய்து உகக்கும் திருவனந்தாழ்வானே எம்பெருமானாராக அவதரித்தார். அவரே மீண்டும் மணவாள மாமுனிகளாக அவதரித்தார். இவருடைய திருத்தகப்பனார் திருநாவீறுடைய பிரான் தாஸரண்ணர். மணவாளமாமுனிகளின் திரு அவதாரத் தினால் செந்தமிழ் வேதியர் சிந்தை மதளிந்து மகிழ்ந்தனர். பிள்ளைலோகாசாரியர் அருளிய நற்கலைகள் தேசு பொலிந்தன. நம்மாழ்வார் அருளிய அருளிச் செயல்கள் பெருமை பெற்று விளங்கின. உலகோர்கள் எல்லாம் நண்ணரு ஞானம் தலைக் கொண்டு நாரணற்கு ஆயினர். மணவாள மாமுனிகளுக்குச் சிறு வயதில் அவரது தாய் தந்தையர் இட்ட பெயர் 'அழகிய மணவாளன்' என்பதே யாகும்.

அமுதினை மயக்கும் சொல்லமுது : மணவாள மாமுனிகள் ஞானக்கடல், அநுஷ்டான சீலர், பரம ஸாத்விகர், அழகிய சொல் வண்ணம் கொண்டவர். ஆழ்ந்த அரிய கருத்துகளை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கூறுவதில் வல்லவர் எம்பெருமான் பேச்சிலும் வல்லவன். அவனை 'வாக்மீ, என்பர் பெரியோர், இராமாவதாரத்தில் 'மதுரா மதுராலாபா' என்று பிராட்டியின் சொல்லமுதக் கடலில் மூழ்கினான். கிருஷ்ணாவதார காலத்தில் கோபியர்களின் வார்த்தைகளைக் கேட்பதில் மிகவும் மகிழ்ந் திருந்தான். அர்ச்சாவதாரத்தில் மணவாளமாமுனிகளின் அமுத மொழிகளைக் கேட்க விரும்பினான். மணவாளமாமுனிகளின் திருவாக்கினால் திருவாய்மொழிப் பொருளைக் கேட்டு உவந்தான். மணவாளமாமுனிகளின் சொல்லமுது அரங்கத்து அமுதினையும் ஈர்த்தது.

இவரும் கற்கவேண்டுமோ : பகவான் இராமனாக இருந்த போது வசிஷ்டரிடமும் விசுவாமித்திரரிடமும் பல கலைகளைக் கற்றான். அவனே கண்ணனாக இருந்தபோது ஸாந்தீபனி என்பவரிடம் கல்விகற்றான். பகவான் ஸர்வக்ஞனாகி இருந்தும் மனிதகுலத்தில் தோன்றியபோது 'ஒரு ஆசாரியனிடம்' கல்வி கற்கவேண்டும் என்ற கடமையைச் செய்துகாட்டினான். அதுபோல் மணவாளமாமுனிகள் சிறுவயதிலேயே ஞானக் கடலாக இருந்தாலும், தன் திருத்தகப்பனார் முதலானோரிடம் ஸகல சாஸ்திரார்த்தங்களையும் வேதவேதாந்தங்களையும் கற்றார். சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறி யாவும் அறிந்து பூர்ண சந்திரனாக இருந்து அனைவரையும் மகிழ்வித்தார். எழுபத்துமூன்று

http://acharya.org

திருநக்ஷத்திரங்கள் எழுந்தருளி இருந்து உலகைத் திருத்திப் பணி கொண்டு மகிழ்வித்தார்.

ஆசார்ய லாபம் பகவானாலே :—பகவானின் திவ்யாநுக்ரஹத்தினால் நம் மணவாளமாமுனிகளுக்கு ஞானம் அநுட்டானமிவை நன்றாகவே உடைய ஸதாசார்ய ஸம்பந்தம் கிடைத்தது. இந்த ஸதாசாரியரின் பெயர் திருமலை ஆழ்வார் என்பதாகும். ஸம்ஸ்கிருத மொழியில் இவரை ஸ்ரீசைலநாதர் என்பர். ஆழ்வார்களின் ஈரச் சொற்களிலே இவருக்கு அளவுகடந்த ஈடுபாடு இருந்தமையால் 'திருவாய்மொழிப்பிள்ளை' என்று பெயர் ஏற்பட்டு நிலைத்துவிட்டது. மணவாளமாமுனிகள் தாம் (நளிய உபதேசரத்தின மாலையின் தொடக்கத்தில் 'எந்தை திருவாய் மொழிப்பிள்ளை இன்னருளால்' என்று குறிப்பிடுகிறார். திருவாய் மொழிப்பிள்ளை பிள்ளைலோகாசாரியர் திருவடிகளில் ஆச்ரயித்து எல்லா சாஸ்திரங்களின் பொருள்களையும் நன்கு கற்றுணர்ந்தார். இவர் மணவாளமாமுனிகளை 'ஆமுதல்வன்' என்று கடாக்ஷித்து தனக்கு ஆசாரியர்களிடமிருந்து கிடைத்த அபூர்வ அர்த்த விசேஷங்களை எல்லாம் உபதேசித்தார். மணவாளமாமுனிகளின் ஞானம் பக்தி வைராக்யம் முதலியவற்றைக் கண்ட திருவாய் மொழிப் பிள்ளை, மணவாளமாமுனிகளை நோக்கி, 'அழகிய மணவாளரே! ஆழ்வான் 'பட்டர்' நம்பிள்ளை முதலான மஹாசாரியர்கள், ஸகல சாஸ்திரப்ரவீணர்களாக இருந்தாலும், ஆழ்வார்களின் ஈரச் சொற்களிலேயே (அருளிச்செயல்களிலேயே) ஊன்றி இருந்து அவற்றின் பொருள்களை எடுத்துரைத்து அனைவரையும் மகிழ்விப்பதையே சிறந்த தொண்டாகக் கருதிச் செய்து வாழ்ந்தனர். நீரும், அப்படியே நம் பூர்வாசாரியர்களை அடியொற்றி அருளிச் செயலின் பிரவசனத்திலேயே ஊன்றி இரும்' என்று நியமித்தார். மணவாளமாமுனிகளும் ஆசார்ய நியமனத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு, மதுரகவிகள் நம்மாழ்வாரையே அன்னையாய், அத்தனாய் கொண்டு அவரிடம் அன்பு மீதூர்ந்து இருந்ததுபோல் அழகிய மணவாளராகிய மணவாளமாமுனிகளும்,

அன்னையுமத்தனு மாசாரியனு மனைத்துறவும்
மன்னியபேறும் உபாயமும் தெய்வமும் மற்றுமெலாம்
என்னையளித்த திருவாய் மொழிப்பிள்ளை என்று நெஞ்சே
உன்னியுவந்து திகழ்ந்து தரிசித்து இனியுய்ந்திடவே.

என்று திருவாய்மொழிப்பிள்ளையைத் தவிர வேறொரு தெய்வம் பற்றாதே அவருக்குத் தொண்டு செய்துகொண்டு அவரது

http://acharya.org

நியமனத்தின்படியே எல்லாவற்றையும் செய்து வந்தார். மணவாளமாமுனிகள் தமக்கு இப்படிப்பட்ட ஆசாரியர் கிடைத்ததை நினைத்து மகிழ்ந்து 'ஆசார்ய லாபம் பகவானுலே' என்று எண்ணினார்.

யதீந்த்ரப்ரவணம் வந்தே :—திருவாய்மொழிப்பிள்ளை மணவாள மாமுனிகளுக்குக் காலக்ஷேபம் சொல்லும்போதும், மற்ற சமயங்களிலும், எம்பெருமானுருடைய (ராமாநுசருடைய) பெருமைகளைப் பலவகையாகக் கூறி அநுபவிப்பார். அவருக்கு ஆழ்வார்களிடத்திலும் அருளிச்செயல் திறத்திலும் இருந்த ஈடுபாட்டினை அடிக்கடி கூறுவார். 'மாறனடிபணிந்துய்ந்த விராமாநுசன்' என்பார். 'பண்தருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய் விண்டிட எங்கள் இராமாநுசமுனிவேழம்' என்று கூறுவார். ஆசாரியரின் திருவாக்கினுல் எம்பெருமானுர் வைபவத்தில் ஆழ்ந்த மணவாளமாமுனிகள், ராமாநுஜருக்கு ஒரு ஸன்னிதி கட்ட வேணுமென தீர்மானித்தார். பகவானின் ஸன்னிதியாக இருந்தாலும், ஆசாரியனின் ஸன்னிதியாக இருந்தாலும் அந்த ஸன்னிதிகளின் அருகில் மங்களாசாஸனபரர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் பலர் இருக்கவேண்டும்; மணவாளமாமுனிகளும் தம் எண்ணத்தை சிஷ்யர்களிடம் வெளியிட்டு ஆழ்வார் திருநகரியில் ஒரு கோயில் கட்டினுர். (அந்த) ராமாநுஜரைப்பற்றி 'யதிராஜ விம்சதி' என்ற ஸ்தோத்ரத்தை அருளிச் செய்தார். ஸன்னிதியைச் சுற்றி திருவீதிகளை அமைத்து, அங்கு இராமாநுசனைத் தொழும் பெரியோர்கள் நிலையாக வசிக்க ஏற்பாடு செய்தார். அந்த இடத்திற்கு 'ராமாநுஜ சதுர்வேதி மங்கலம்' என்று பெயரிட்டார். அதிலிருந்து அனைவரும் மணவாளமாமுனிகளை 'யதீந்த்ரப்ரவணர்.' என்று அழைத்தனர். நாமும் அப்பெயரைச் சொல்லியே அஞ்சலி செலுத்துவோமே! 'யதீந்த்ரப்ரவணம் வந்தே.'

ரஹஸ்யம் விளைந்த மண் ;—அழகியமணவாளர் (மணவாள மாமுனிகள்) ஆசாரியரின் நியமனப்படி ஸ்ரீரங்கம் சென்று அங்கே அடியார்களோடு சேர்ந்து அரங்கனுக்குக் கைங்கர்யம் செய்து கொண்டு எம்பெருமானுர் தரிசனத்தை ரக்ஷித்து வரவேண்டும் என்று எண்ணினுர். ஆழ்வார் திருநகரியிலிருந்து புறப்பட்டு ஸ்ரீவில்லிபுத்தூர், திருமாலிருஞ்சோலை முதலான இடங்களுக்குச் சென்று மங்களாசாஸனம் செய்து திருவரங்கத்திற்கு எழுந்தருளினுர்.

http://acharya.org

ஒரு திவ்ய தேசத்திற்குச் சென்றால், 'இந்தக் காலத்து யாத்ரீகர்கள் போல் 'சென்றோம், வந்தோம்' என்றிராமல் திவ்ய தேசத்திற்குப் போகிறோம் என்ற பாரிப்பு இருக்கவேண்டும், ஊரின் அழகையும் திருவீதிகளையும் அங்கு வாழ்மக்களின் பாக்யத்தையும் நினைத்துப் பெருமையடையவேண்டும். பிறகு எம்பெருமான்களையும், அவ்வூருக்குப் பெருமை தேடித்தரும் பெரியோர்களையும் வணங்கவேண்டும். மணவாளமாமுனிகள் திருவரங்கத்தரவணையில் பள்ளிகொண்ட எம்பெருமானை 'ஆபாத சூடம்' ஸேவித்து மகிழ்ந்தார். பூர்வாசாரியர்களின் திருமாளிகை களை எல்லாம் கண்களாவாரத் தொழுது பிள்ளைலோகாசாரியரின் திருமாளிகைக்கு எழுந்தருளினார். பிள்ளை லோகாசாரியர் பரம கிருபையோடு பதினெட்டு ரஹஸ்யக்ரந்தங்களை அருளியவர். நிகரற்ற இந்த ரஹஸ்யக் கிரந்தங்களால் சிறந்த சாஸ்த்ரார்த் தங்களை நமக்கு அளித்துள்ளார். ஒவ்வோரிடத்திற்கு ஒவ்வொரு வகையில் பெருமை! பிள்ளை லோகாசாரியரின் திருமாளிகையில் உள்ள பூமியின் மண்ணுக்கு 'ரஹஸ்யம் விளைந்த மண்' என்ற பெருமை!

மணவாளமாமுனிகள் * பிள்ளைலோகாசாரியரின் திருமாளிகையை அடைந்துப் பரவசமடைந்தார்.

வாழி யுலகாசிரியன் வாழிஅவன் மன்னுகுலம்
வாழி முடும்பையெனும் மாநகரம்—வாழி
மனஞ் சூழ்ந்த பேரின்ப மல்கு மிக நல்லோர்
இனஞ் சூழ்ந்து இருக்கு மிருப்பு.

என்று கூறிக்கொண்டே அத் திருமாளிகை மண்ணை 'பொன் விளைந்த பூமியை விட'ச் சிறப்புடையதாக ஆதரித்தார்.

சொன்ன வண்ணம் செய்தவர்:— மணவாளமாமுனிகள் திருவேங்கடம் எழுந்தருளித் திருவேங்கடமுடையானை மங்களா சாஸனம் செய்து பெருமாள்கோயிலுக்குக் (காஞ்சீபுரத்திற்கு) எழுந்தருளினார். பேரருளாளனை ஸேவித்து வரந்தருமாமணி வண்ணனாகிய அவனது அருள், ஔதாரியம், வடிவழகு ஆகியவற்றில் ஆழங்காற்பட்டு தேவராஜ மங்களத்தை அருளி,

'அஸ்து ஸ்ரீ ஸ்தன கஸ்தூரீ வாஸநா வாஸிதோரஸே!
ஸ்ரீ ஹஸ்திகிரி நாதாய தேவராஜாய மங்களம்!!

என்று போற்றிப் பூர்த்தி செய்தார்.

http://acharya.org

'தொண்டை நாடு சான்றோருடைத்து' என்பதற்குச் சேர காஞ்சீபுரத்தில் அறிவிற் சிறந்த மஹான்கள் பலர் வாழ்ந்து வந்தனர். கிடாம்பி நாயனுர் என்பவர் அவர்களுள் ஒருவர். ஸ்ரீபாஷ்யத்தைக் கசடறக்கற்க (அதிகரிக்க) திருவுள்ளம் கொண்ட மணவாளமாமுனிகள் இவரையே தேர்ந்தெடுத்தார். அதற்கு முன் எம்பெருமானுரின் திரு அவதாரஸ்தலமாகிய ஸ்ரீபெரும் பூதூருக்குச் சென்று நம் இராமாநுசனை ஸேவித்து விடை பெற்றுவரத் தீர்மானித்தார். ஸ்ரீபெரும்பூதூருக்கு எழுந்தருளி னுர். நம்மாழ்வாரின் அவதாரஸ்தலமாகிய ஆழ்வார் திருநகரி யிலிருந்து எம்பெருமானுரின் அவதாரஸ்தலமாகிய ஸ்ரீபெரும் பூதூருக்குத் தாம் வந்திருப்பதை நினைத்து மகிழ்ந்தார். செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளும் சிறந்த பெரும்பூதூரின் நீர்வளம் நிலவளம் அறிவுவளங்களைக் கண்டு பூரித்தார். மெய்பாடு ஏற்பட்டது! இது ஸ்ரீபெரும்பூதூரா! எதிராசர் அவதரித்த இடமா? இங்கு வந்துவிட்டேனு! எப்படி வந்தேன்! என்ன புண்ணியம் செய்தேன்! இங்கு வரும்பேறு எனக்கு எப்படிக் கிடைத்தது! இங்கு வந்திருப்பது உண்மைதானு! இது மருளோ! தெருளோ! என்று வியந்து தன்னிலை மறந்தார்.

'இதுவோ பெரும்பூதூர்! இங்கே பிறந்தோ
எதிராசர் எம்மிடரைத்தீர்த்தார்!—இதுவோதான்
தேங்கும் பொருநல் திருநகரிக்கு ஒப்பான
ஓங்கு புகழுடைய வூர்'!

'எந்தை எதிராசர் எம்மை எடுத்தளிக்க
வந்த பெரும்பூதூரில் வந்தோமோ!—சிந்தை
மருளோ! தெருளோ! மகிழ்மாலை மார்வன்
அருளோ! இப்பேற்றுக்கு அடி!'

என்றெல்லாம் வாய் வெருவிக்கொண்டே எம்பெருமானுரைத் திருவடி தொழுது, விண்ணப்பம் செய்து விடைபெற்றுக்கொண்டு காஞ்சீபுரத்திற்கு எழுந்தருளினார். கிடாம்பி நாயனுரிடம் ஸ்ரீபாஷ்யம் அதிகரித்து, சொன்ன வண்ணம் செய்த பெருமாள் (ஸ்ரீயதோக்தகாரி) ஸன்னிதியில் ஓராண்டுக்காலம் தங்கி இருந்து ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் ஸாதித்தார். இப்போதும் யதோக்தகாரி ஸன்னிதியில் மணவாள மாமுனிகள் 'வியாக்யான முத்திரையோடு' ஸேவை ஸாதிப்பதை நாம்ஸேவித்து மகிழலாம். மணவாள மாமுனிகள் எல்லாவற்றையும் ஆசாரிய நியமனத்தின்படியே செய்து வந்தபடியாலும், சொன்னவண்ணம் செய்த எம்பெருமான்

http://acharya.org

ஸன்னிதியில்எழுந்தருளி இருந்து, பெருமை மிக்க யதோக்தகாரி எம்பெருமானுக்கு மேலும் இப்பெருமையையும் சேர்த்துவைத்த படியாலும் இவரும் சொன்னவண்ணம் செய்தவரானார். மணவாள மாமுனிகள் சடகோபஜீயர் என்பவரிடம் ஸந்யாஸம் ஸ்வீகரித்தார்.

அஷ்டதிக்கஜாசாரியார்கள்:— எங்கும் தழைத் தாங்கி வளர்ந்திருந்த ஸ்ரீவைஷ்ணவத்தைக் கட்டிக் காப்பாற்றி வளர்க்க எம்பெருமானார் எழுபத்து நான்கு ஸிம்ஹாஸனாதிபதிகளை நியமித்தார். இவர்களுடைய பரம்பரையில் தோன்றிய ஆசார்ய ஸம்பந்தம் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும். இவை எல்லாம் எம்பெருமானாரின் திவ்யகடாக்ஷத்தைப் பெற்றவை. எழுபத்து நான்கு ஸிம்ஹாஸனாதிபதிகளின் திருவுருவங்களை ஸ்ரீபெரும்பூதூரில் திரு அவதாரமண்டபத்திற்குள் ஸேவிக்கலாம். எம்பெருமானார் திருவீதிப்புறப்பாடு கண்டருளும் காலத்தில் அவதார மண்டபத்தின் வாசலில் எழுந்தருளும்போது எல்லாம் இவர்களுக்கு முதலியாண்டான் ஸாதித்து மரியாதை செய்யப்படுகிறது. (பெருமைமிக்க இந்த மண்டபம் வெகு நாட்களாகப் பொலிவுகுன்றி இருந்து ஸ்ரீபெரும்பூதூர் வரத யதிராஜ ஜீயர் ஸ்வாமியால்பழுதுபார்க்கப்பட்டு மிகப் பொலிவுடன், பாதுகாக்கப் பட்டு வருகிறது.) இதுபோல் ஸ்ரீரங்கத்திலும் ஸ்ரீபெரும்பூதூரிலும் மணவாள மாமுனிகள் ஸன்னிதியின் முன்புறவாசலில் அஷ்டதிக்கஜாசாரியார்களின் அழகிய திருவுருங்கள் அலங்கரிக்கின்றன. மணவாளமாமுனிகளின் திருவடியில் பல்லாயிரக் கணக்கானசிஷ்யர்கள் ஆச்ரயித்து உள்ளனர். அவர்களுள் மிகமிக முக்கிய மானவர்கள் ஸகல கலா ப்ரவீணர்களான அஷ்டதிக்கஜாசாரியர்கள். வானமாமலைஜீயர், பட்டர்பிரான் ஜீயர், திருவேங்கட ராமாநுஜஜீயர், கோயிலண்ணன், பிரதிவாதி பயங்கரம் அண்ணன், எறும்பி அப்பா, அப்பிள்ளை, அப்புள்ளார் ஆகிய இவ்வெண்மரும் அஷ்டதிக்கஜாசாரியர்கள் எனப்படுகின்றனர். இவர்களது விசேஷமான பெருமைகளை 'யதீந்த்ரப்ரவணப் பிரபாவம்' என்ற நூலில் காணலாம்.

"பாராருமங்கை திருவேங்கடமுனி பட்டர் பிரான்
ஆராமம் சூழ் கோயில் கந்தாடை அண்ணன் எறும்பியப்பா
ஏராரும் அப்பிள்ளை அப்புள்ளார் பரவாதி அண்ணனெனும்
பேரார்ந்த திக்கயம் சூழ் வரயோகியைச் சிந்தியுமே."

என்ற இப்பாடல் அஷ்டதிக்கஜாசாரியர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறது.

http://acharya.org

மணவாளமாமுனிகளின் அருளிச்செயல்கள் : நம் மணவாள மாமுனிகள், பிள்ளைலோகாசாரியர் அருளிய ஸ்ரீவசன பூஷணம், தத்வத்ரயம், முமுக்ஷுப்படி ஆகிய மூன்று ரஹஸ்யங்களுக்கும் வியாக்யானம், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிய ஆசார்ய ஹ்ருதயத்திற்கு வியாக்யானம், இராமாநுச நூற்றந்தாதிக்குச் சுருக்கமான உரை, அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அருளிய ஞானசாரம், பிரமேய சாரங்களுக்குப் புராண சுலோகங்களை எடுத்துக்காட்டாகச் சேர்த்துச் சிற்றுரை, பகவத் கீதைக்குத் தாத்பர்யதீபம் என்ற வியாக்யானம், ஈடு முப்பத்தாறாயிரப்படிக்கும், தாம் அருளிய வியாக்யானங்களுக்கும் பிரமாணத் திரட்டுகள் ஆகியவற்றை அருளியுள்ளார். உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்திப்ரபந்தம் ஆகிய மூன்று தமிழ்ப் பிரபந்தங்களையும், ஸம்ஸ்கிருதமொழியில் யதிராஜவிம்சதி, தேவராஜ மங்களம் ஆகியவற்றையும் அருளிச் செய்துள்ளார். இவை தேனும் பாலும் கன்னலும் அமுதுமாக பகவானுக்கும் அவனடியார்களுக்கும் என்றும் விருந்தளிப்பவை யாம்.

கரையானுக்கு இரையாயின : நம்பிள்ளையின் சிஷ்யரான பெரியவாச்சான் பிள்ளையை 'வியாக்யான சக்ரவர்த்தி' என்று அனைவரும் கூறுவர். இவர் மிகச் சிறந்த உரையாசிரியர். அருளிச்செயல் கடலில் ஆழ்ந்திருந்த அபூர்வமாயும், அழகியதாயும் உள்ள அர்த்த விசேஷ ரத்தினங்களையும் மாணிக்கங்களையும் வெளியில் எடுத்துக்கொடுத்தவர். ராமாயண ஸாரத்தைப் பருக வைத்தவர். இவர் நாலாயிரத்திற்கும் வியாக்யானம் அருளியுள்ளார். காலப்போக்கில் பெரியாழ்வார் திருமொழி முதற் பாசுரம் தொடங்கி 'வாக்குத் தூய்மை' வரை (சுமார் 400 பாசுரங்களுக்குமேல்) இவர் அருளிய உரை கரையானுக்கு இரையாயின. பிற்காலத்தில் இப்பாசுரங்களுக்கு மணவாள மாமுனிகள் வியாக்யானம் அருளியுள்ளார். இந்த வியாக்யானத்தை ஸேவித்த பெரியோர்கள், "மணவாள மாமுனிகள், நாலாயிரத்திற்கும் வியாக்யானம் எழுதி இருந்தால் மிகவும் நன்றாக இருக்குமே!" என்று வியந்து பேசிக் கொள்வார்களாம்.

மணவாளமாமுனிகளின் ஸ்ரீ ஸூக்திப் பெருமை : உலகில் சிலர் எழுதுவதில் வல்லவர். சிலர் பேச்சில் வல்லவர். மணவாள மாமுனிகளின் ஸ்ரீ ஸூக்திகள் மிகவும் இனியவை. காம்பீர்யம், சொற்சுவை, பொருட்சுவை நிரம்பியவை. தொட்ட இடமெல்லாம் சாஸ்த்ரார்த்தம் நிரம்பியவை. மிகவும் எளிமை

http://acharya.org

யானவை. பிறர் மனம் புண்படாதவாறு விரோத பரிஹாரங்களைக் கொண்டவை. இவற்றை வாசிப்பவர்கள் அமுதக் கடலில் மூழ்கி நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்பார்கள்.

ஆசை நிறைவேறியது : மணவாள மாமுனிகளின் காலக்ஷேபம் ஸாதிக்கும் அழகைப் பெரியோர்கள் பெரிதும் போற்றுகிறார்கள். கேட்டார் பிணைக்கும் தகையவாய் எளிமையாகவும் இனிமையாகவும் சொற்களைக் கூறும் மணவாளமாமுனிகளை ஸேவிக்கும் பாமர மனிதனும் 'யார் கொல் இச் சொல்லின் செல்வர்' என்று கொண்டாடுவர். விசத்வாக்சிகாமணி என்று அனைவரும் போற்றும் மணவாளமாமுனிகளின் திருவாக்கை அனைவரும் கேட்கவேண்டும் என்று ஆசைப்படுவதுபோல திருவரங்கச் செல்வனாகிய அழகிய மணவாளனும் ஆசைப் பட்டான்.

நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழியை 'வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்ற தமிழாயிரம்' என்று கொண்டாடுவர். குசலவர்கள் வாயிலாக இராமன் தன் சரித்திரத்தைக் கேட்டதுபோல, அழகிய மணவாளன் மணவாள மாமுனிகள் வாயிலாகத் திருவாய் மொழிப்பொருளைக் கேட்க விரும்பினான். ஜீயருக்கு அருளப்பாடு இட்டு அழைத்து திருவாய் மொழியை, ஈடு முப்பத்தாறாயிரப்படி முதலான வியாக்யானங்களுடன் காலக்ஷேபம் ஸாதிக்க நியமித்தான். அரங்கன் நாச்சிமாருடனும் அனந்த கருட விஷ்வக்ஸேனர், நித்யஸூரிகளோடும் காலக்ஷேபம் கேட்டான். அந்த ஓராண்டுக் காலம் தன்னுடைய உத்ஸவங்களை எல்லாம் நிறுத்திக்கொண்டான் இப்படிப்பட்ட ஸதாசாரிய ஸம்பந்தம் தனக்குக் கிடைத்ததே என்று எண்ணி மகிழ்ந்தான். பகவத் விஷயசாற்றுமறை பூர்த்தியாகும் நேரத்தில் திருவரங்கன் விலக்ஷணமான சிறு குழந்தையாக காலக்ஷேப கோஷ்டியின் நடுவில் தோன்றி,

> ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்!
> யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம்முநிம்!!

என்று விண்ணப்பம் செய்து கைகூப்பி ஸேவித்து மறைந்தான். அரங்கனின் நெடுநாள் ஆசையும் நிறைவேறியது. நம் மணவாள மாமுனிகள் அவதரிக்கவில்லையானால் அருளிச் செயலாகிற தமிழ்வேதம் என்னவாகி இருக்கும்!

> சேற்றுக்கமல வயல் சூழ் அரங்கர் தம் சீர்தழைப்ப
> போற்றித் தொழு நல்ல அந்தணர் வாழ இப்பூதலத்தே
> மாற்றற்ற செம்பொன் மணவாள மாமுனிவந்திலனேல்
> ஆற்றில் கரைத்த புளி யல்லவோ தமிழாரணமே,

http://acharya.org

பிள்ளைலோகம் ஸ்ரீ உ.வே.திருவேங்கடாசார்யர்
பிள்ளைலோகம்
(ஸ்ரீ உ.வே.பாஷ்யகாராசார்யருடைய திருக்குமாரர்)

தனியன்

श्रीगर्गवँशे वमलादिध पूर्णिच हैं श्रीभाक्यकरगुह्ववर्य तनूजरन्नम ।
त-मादवाह्ले नगमा त रह-यजालैं श्रीवडि क्यर्य गुह्वम वहमाश्रयाम: ॥

ஸ்ரீகர்கவம்ஶ விமலோததி பூர்ணசந்த்ரம்
ஸ்ரீபாஷ்யகார குருவர்ய தநூஜரத்னம்
தஸ்மாதவாப்த நிகமாந்த ரஹஸ்ய ஜாலம்
ஸ்ரீவேங்கடார்ய குருமந்வஹ மாஶ்ரயாம:

வாழித் திருநாமம்

சீராரும் கச்சி நகர் சிறக்க வந்தோன் வாழியே
சீர்மைமிகு கார்க்யகுலம் புரக்க வந்தோன் வாழியே*
பாராரும் பதம் பணியும் பரிவுடையோன் வாழியே
பாடியத்தார் திருமகனாய் வந்துதித்தான் வாழியே*
ஏராரும் திருவெஃகா அருள் பெறுவோன் வாழியே
எழிலார்ந்த அருந்தொண்டு செய்யுமவன் வாழியே*
சீராரும் தலசயனத்தார்தொழுதெழுவோன் வாழியே
திருவேங்கடவர் தாளிணைகள் செக தலத்தில் வாழியே.

மங்களம்

क÷चीरि नवासाय वडि क्यर्य महात्मनी
गा र्यवैं याय गुर्वा नन्यश्रीर्नन्य मङगलम ॥

காஞ்சீபுர நிவாஸாய வேங்கடார்ய மஹாத்மநே
கார்க்ய வம்ஶ்யாய குரவே நித்யஸ்ரீர் நித்யமங்களம்

http://acharya.org

பிள்ளைலோகம்

ஸ்ரீ உ.வே. ஸ்தலசயனத்துறைவார்

(பிள்ளைலோகம் திருவேங்கடாசாரியர் ஸ்வாமியின் குமாரர்)

श्रीगर्गवँशे वमलादिध ूर्णिच ह्लैं श्रीभाक्यकरगुङ्क्वर्य तनुजरन्नम:।
त–मादवाह्ले नगमा त रह–यजालैं श्रीवडि क्यर्य गुङ्कम वहमाश्रयाम:॥

ஸ்ரீகர்கவம்*ஶ* கல*ஶ*ார்ணவ பூர்ணசந்த்ரம்
ஸ்ரீவேங்கடார்ய குருவர்ய தநூஜரத்னம்
தஸ்மாதவாப்த நிகமாந்த ரஹஸ்யஜாலம்
ஸ்ரீமத் ஸ்தலே*ஶ*ய குரும் ஸத்தம் பஜாமி.

வாழித் திருநாமம்

சீராரும் கார்க்யகுலம் சிறக்கவந்தோன் வாழியே
சுக்கிலத்துலா அநுடத்தில் தோன்றினான் வாழியே
காராரும் கடல்மல்லைத் தலத்துதித்தான் வாழியே
கருணையுறு வேங்கடவர் தவப்புதல்வன் வாழியே
ஏராரும் சிந்தைமகிழ் இனிய சொல்லோன் வாழியே
இன்தமிழும் ஸூரமொழியும் இணைந்த செல்வன் வாழியே
சீருபய வேதாந்தச் செழுமணியோன் வாழியே
தலசயனத் துறைவார் தம் திருவடிகள் வாழியே

तुलानूरधा सि÷जातैं ह्यैं गुङ्कवरैं सदा।
सर्न्सैंह्लदाये वदुषैं व दडिहैं –थलशोयनम॥

துலாநூராதே ஸஞ்ஜாதம் ப்ரியம் குருவரம் ஸதா
ஸத்ஸம்ப்ரதாய விதுஷம் வந்தே (அ) ஹம் ஸ்தல*ஶ*ாயிநம்

மங்களம்

मङ्गलैं गुङ्कवर्याय मङ्गलैं –थलशापयनी।
मङ्गलैं गा र्यवैं याये नर्न्यश्रीर्नर्न्य मङ्गलम॥

மங்களம் குருவர்யாய மங்களம் ஸ்தல*ஶ*ாயினே
மங்களம் கார்க்ய வம்*ஶ*யாய நித்யஸ்ரீர் நித்ய மங்களம்

http://acharya.org

பிள்ளைலோகம் ஸ்ரீ உ.வே. திருவேங்கடாசார்யர்

(பிள்ளைலோகம் ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி குமாரர்)

தனியன்

श्रीगर्गवँशे वमलादिध पूर्णिच हैं श्रीमन्‌-थलशियगु लम पुश्रिलम ।
त-मादवाह्ले नगमा तयुगैं वरय्यिैं श्रीवडिङ क्यर्य गुङ्कवर्यमहैं श्रयोम ॥

ஸ்ரீகர்கவம்ச விமலோததி பூர்ணசந்த்ரம் |
ஸ்ரீமத் ஸ்தலேஶய குருத்தம் புத்ர ரத்நம் ||
தஸ்மாதவாப்த நிகமாந்தயுகம் வரேண்யம் |
ஸ்ரீவேங்கடார்ய குருவர்யமஹம் ஶ்ரயாமி ||

வாழித் திருநாமம்

சீராரும் கார்க்யகுலம் சிறக்கவந்தோன் வாழியே |
சுக்கில தநுர் அவிட்டத்தில் தரணி வந்தோன் வாழியே |
தலசயனத்துறைவார் தம் திருமகனார் வாழியே |
கடல்மல்லை பூதத்தார் கழல் பணிவோன் வாழியே |
பன்னிருவர் பாடல்கள் பரிந்துரைப்போன் வாழியே |
தாள் பணியும் அடியார்க்கு இதமுறைப்போன் வாழியே |
திருவல்லிக்கேணியான் தன் புகழுரைப்போன் வாழியே |
பிள்ளைலோக வேங்கடவர் தாளிணைகள் வாழியே.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமல்லோகார்ய மஹாமுநயே நம:

பெருமாளகோயில் யதீந்த்ரப்ரவணப்ரபாவம்
பிள்ளைலோகம் ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி திருக்குமாரர்

ஸ்ரீ உ.வே. திருவேங்கடாசாரியர் ஸ்வாமி

Book-Post

ஸ்ரீ உ.வே. ....

....

....

RNR ✆ 28441856

http://acharya.org